1994 ஜனவரி 4]

மாண்புமிகு பேராசிரியர் சு. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 20-1-1992-ல் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கெனவே தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதைப் போல, பாட நூல் கழகத்தை அப்படிக் கட்டித்தர கட்டாயப்படுத்த முடியாது. ஆனால் அரசு நிதியிலிருந்து அந்தக் கட்டிடம் கட்ட நிதி தேவையென்று அவர்கள் கேட்பார்களேயானால், அரசு ஒதுக்கும் நிதியிலிருந்து பள்ளிக் கட்டிடம் தேவை என்ற முன்மொழிவை அனுப்புவார்களேயானால், பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாக ரூ. 1,12,500 செலுத்துவதாகத் தீர்மானம் இயற்றி, அந்த தீர்மானத்துடன் இத்தகைய முன்மொழிவு அனுப்பப்பட்டால், நிதிநிலைக்கேறப அரசு ரூ. 1,12,500 கொடுப்பது குறித்து முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 157, திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன், இருக்கையில் இல்லை.

வினா எண் 158, திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

158 —

சிவகெங்கை நகராட்சியை முதல்நிலை நகராட்சியாக உயர்த்துதல்.

* ***11064*** - *திரு. கே. ஆர். முருகானந்தம்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகெங்கை நகராட்சியை முதல்நிலை நகராட்சியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், எப்போது உயர்த்தப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகெங்கை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தினுடைய தலைநகராக இருக்கிறது. இன்றையதினம் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி ஆட்சியில் அரசு அலுவலகங்கள், அரசுக் குடியிருப்புகள் எல்லாம் அதிகமாக விரிவடைந்து, மக்கள் தொகையும் அதிகமாகி இருக்கிறது. நகரம் வளர்ச்சியடைந்திருக்கிறது. நகரத்தின் எல்லையும் கூட கூடியிருக்கிறது. நகராட்சியின் வருமானமும் அதிகமாகியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், அதை முதல்நிலை

நகராட்சியாக உயர்ந்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகராட்சியை இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலைக்கு உயர்த்த வேண்டுமென்று சொன்னால், அந்த நகராட்சியினுடைய கடந்த நான்காண்டுகளில் சராசரி வருமானம் சுமார் 40 லட்சம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கக்கூடாது. அந்த அடிப்படையில், சிவகெங்கை நகராட்சி அந்தக் குறியீட்டைப் பெற்றிருந்தாலும் கூட, இன்றைக்கு ஒரு நகராட்சியை நிலை உயர்த்துகிறபோது, பணியிடம் மற்றும் இதரச் செலவினங்கள் அதிகம் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது என்ற காரணத்தாலும், அரசு செலவினங்களில் சிக்கன நடவடிக்கை கடைப்பிடிப்பதைக் கருத்தில் கொண்டும் இதுபோன்ற செயற்குறிப்புகள் தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.10

திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எல்லா மாவட்டங்களினுடைய தலைநகரங்களும் முதல் நிலை நகராட்சிகளாக இருக்கின்றன. ஆனால், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தினுடைய தலைநகரமான சிவகெங்கை மட்டும் முதல்தரமான நகராட்சியாக இல்லை. இந்தச் சூழ்நிலையில் அந்த நகராட்சியை ஒட்டியுள்ள காஞ்சரங்கால், புதூர், தையூர், செங்கமலநகர் மேலவாணிமுடி போன்ற பகுதிகளையும் அந்த நகராட்சியினுடைய எல்லைகளோடு சேர்த்து அதை முதல் நிலை நகராட்சியாக மாற்ற அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கையைப் பொறுத்தவரையில், இது தற்போது மட்டும் தான் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து இருந்தேன்; நிரந்தரமாக நிறுத்தி வைக்கப்படவில்லை. அரசினுடைய பரிசீலனையில் அந்த செயற்குறிப்பு இருந்து வருகிறது. தற்போது ஒரு நகராட்சியின் நிலையை உயர்த்துகின்றபோது அதிக பணி இடங்களைத் தோற்றுவிக்கவேண்டி இருப்பதன் காரணத்தாலும், செலவினங்கள் அதிகப்படியாக இருக்கின்ற காரணத்தினாலும், அங்கே இந்த நகராட்சியினுடைய வருமானம் குறைகின்ற நிலை ஏற்படுமோ என்ற அச்சப்பாட்டின் காரணமாகவும், சிக்கன நடவடிக்கையைக் கடைப்பிடிப்பதைக் கருத்தில் கொண்டும்

தற்காலிகமாக் நிறுத்திவைக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லி இருந்தேன். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 159, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

159—

பேரூராட்சிகளில் நவீனக் கழிப்பிடங்கள் கட்டுதல்

*** 17552 - திரு. க. அர்ச்சுனன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நகராட்சிகளைப்போல், பேரூராட்சிகளிலும் நவீனக் கழிப்பிடங்கள் கட்டுவது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1988- ஆம் ஆண்டு படிப்படியாக பேரூராட்சிகளில் நவீனக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

திரு. க. அர்ச்சுனன்: பேரவைத் தலைவர் அவர்களே, நவீனக் கழிப்பிடங்கள் பொதுக் கழிப்பிடங்களாகக் கட்டப்பட்டு வருகின்றன. நகராட்சிகளில் இருப்பதுபோன்று மலிவு விலை கழிப்பிடங்கள் வீட்டுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கு கடன் வழங்கப்பட்டால்-பொதுக் கழிப்பிடங்கள், போதிய நீர் இல்லாத காரணத்தினால் பராமரிக்கக்கூடிய நிலை இல்லாத சூழ்நிலையில் பலர் அதைப் பயன்படுத்த முடியவில்லை. எனவே, அந்தந்த வீட்டுக்கு மலிவு விலையில் கடன் கொடுத்து, நகராட்சிகளைப் போல் கழிப்பிடங்களைக் கட்டிக்கொள்வதற்கு வசதி ஏற்படுத்தித் தர முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளைப் போன்று பேரூராட்சிகளிலும் லோ - காஸ்ட் சேனிடேஷன் என்று சொல்லக்கூடிய அளவிலே அந்தந்த வீட்டு சொந்தக்காரர்களுக்கு கடனாகப் பணத்தைக் கொடுத்து அதன் மூலமாக கழிப்பிடங்கள் செய்து கொடுக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது. அது ஆய்வில் இருந்து வருகிறது. பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. க. அர்ச்சுனன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மலிவு விலை கக்கூஸ் கட்டுகின்றவர்களுக்கு ஒரு நபருக்கு எவ்வளவு கடன் வழங்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.